ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2310/07 - 2022 දෙසැම්බර් මස 12 වැනි සඳුදා - 2022.12.12

*2310/07 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு

*1948 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு (திருத்தச்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1934 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதிய ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 51 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

**அறிவித்தல்**

காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழ் 2022.12.05 ஆந் திகதிய 2309/ 04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்ளடக்கப்பட்ட பந்தியை உடனடுத்து பின்வரும் புதிய பந்தியொன்றைச் சேர்த்து திருத்தப்படுகின்றது

விசேட மருத்துவ உத்தியோகத்தர்/அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர்/பல் அறுவை சிகிச்சை மருத்துவ உத்தியோகத்தர்/ அரசாங்க பதிவுசெய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர் பதவிகளுக்கு கட்டாய ஓய்வுபெறச் செய்தல் வயதெல்லை பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(அ) ஏற்கனவே 63 வயதினைப் பூர்த்தி செய்துள்ள மருத்துவர்கள் 2022, திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வுபெறச் செய்தல்.

(ஆ) தற்சமயம் 62 வயதினைப் பூர்த்தி செய்துள்ள மருத்துவர்கள் தங்களது 63 ஆவது வயது பூர்த்தியாகும் போது ஓய்வுபெறச் செய்தல்.

(இ) தற்சமயம் 61 வயதினைப் பூர்த்தி செய்துள்ள மருத்துவர்கள் தங்களது 62 ஆவது வயது பூர்த்தியாவதுடன் ஓய்வுபெறச் செய்தல்.

1A - G 38299 — 07 (2022/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஈ) தற்சமயம் 60 வயதினைப் பூர்த்தி செய்துள்ள மருத்துவர்கள் தங்களது 61 ஆவது வயது பூர்த்தியாவதுடன் ஓய்வுபெறச் செய்தல்.

(உ) தற்சமயம் 59 வயதினைப் பூர்த்தி செய்துள்ள மருத்துவர்கள் தங்களது 60 ஆவது வயது பூர்த்தியாகும் போது ஓய்வுபெறச் செய்தல்.

எவ்வாறாயினும், சனவரி 01 ஆந் திகதி முதல் யூன் 30 ஆந் திகதி வரையான காலத்தில் தமது பிறந்த திகதி வரும் விசேட மருத்துவ உத்தியோகத்தர்கள், அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர், பல் அறுவை சிகிச்சை மருத்துவ உத்தியோகத்தர்கள், அரசாங்க பதிவுசெய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு உரிய வருடத்தின் யூன் மாதம் 30 ஆந் திகதி வரையில் பணியாற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டு ஓய்வுபெறச் செய்தல் மற்றும் யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான காலத்தில் பிறந்த திகதி வரும் விசேட மருத்துவ உத்தியோகத்தர்கள், அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர், பல் அறுவை சிகிச்சை மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் அரசாங்க பதிவுசெய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்களுக்குரிய வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை சேவையாற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டு ஓய்வுபெறச் செய்யப்படுதல் வேண்டும்.

இந்த இடைக்கால ஏற்பாடுகள் 2023, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும்.

**தினேஷ் குணவர்தன,**
பிரதமர் மற்றும் பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2022, திசெம்பர் 12.

EOG 12-0128

இலங்கை அரசாங்கத அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.